செய்தி வெளியீடு எண்.462 நாள்.8.8.2009

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை
**செய்தித்தாள் அறிவிப்பு,**

தமிழ்நாடு அரசு, நிதித்துறையின் 03.09.1999 ஆம் நாளிட்ட 88 (L) W&M /II - 99 ஆம் எண்ணின் அறிவிக்கையின் வரையறைகளின்படி 2009ஆம் ஆண்டு வழஙகப்பட்ட தமிழ்நாடு அரசுப் பங்குகளின் 11.85% நிலுவைத் தொகையானது, 08.09..2009 அன்று 07.09.2009ஆம் நாள் உட்பட்ட உரிய நாளது வரையிலான வட்டித் தொகையுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்று பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது. யாதொரு மாநில அரசால், 1881ஆம் ஆண்டு செலவாணி முறிச்சட்டத்தின் கீழ், மேற்சொன்ன நாளினை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பின், அந்த மாநிலத்தின் தொகை செலுத்தும் அலுவலகஙகளால், முந்தைய அலுவலகப் பணி நாளில் திருப்பிச் செலுத்தப்படும். 08.09.2009 ஆம் நாளிலிருந்தும் அதற்கு பின்னரும் இக்கடனுக்கு வட்டித் தொகை சேராது.

2. 2007ஆம் ஆண்டு அரசு கடன் பத்திரஙகளின் ஒழுஙகுமுறை விதிகளிலுள்ள 24(2) மற்றும் 24(3) ஆம் துணை ஒழுஙகுமுறை விதிகளின்படி, பொது துணை பேரேட்டு படிவத்தில் அல்லது மூலப் பொது துணைப் பேரேட்டு கணக்கில் அல்லது பங்கு முதல் சான்றிதழில், அரசு கடன் பத்திரஙகளை வைத்திருக்கும் பதிவுப் பெற்ற நபர் ஒருவருக்கு , அவருடைய வஙகி கணக்கில் அல்லது மின்னணு பதிவு மூலம் நிதிகளை வரவு வைக்கும் வசதியுள்ள யாதொரு வஙகியில் கணக்கு வைத்திருக்கும் அவருடைய வரவுக் கணக்கில் உரிய விவரஙகளை சேர்த்து, தொகை செலுத்துவதற்கான ஆணை வழஙகுவதன் மூலம் முதிர்வுத் தொகை வழஙகப்படும். கடன் பத்திரஙகளை பொறுத்தமட்டில், தொகை செலுத்தும் நோக்கத்திற்காக, நேர்விக்கேற்ப அசல் சந்தாதாரர் அல்லது இத்தகைய அரசு கடன் பத்திரஙகளை வைத்திருப்பவர் வட்டித்தொகை செலுத்துவதற்காக முகப்பிடப்பட்டுள்ள/பதிவு செய்யப்பட்டுள்ள வஙகிக்கு அல்லது கருவூலத்திற்கு மற்றும் சார் கருவூலத்திற்கு அல்லது பாரத ஸ்டேட் வஙகியின் கிளைக்கு அல்லது இதன் துணை வஙகிகளுக்கு நேர்விற்கேற்ப அவர்களுடைய வஙகிக் கணக்கின் உரிய விவரஙகளை அளிக்க வேண்டும்.

3. இருப்பினும், வஙகிக் கணக்கில் உரிய விவரஙகள் இல்லாத/மின்னணு மூலம் நிதிகளை வரவு வைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படாத நேர்வில், உரிய நாளில் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பங்குகள் தொடர்பான 11.85% பங்குப் பத்திரஙகளை வைத்திருப்பவர்கள், அவர்களுடைய பங்குப் பத்திரஙகளை, 20 நாட்களுக்கு முன்னதாகவே, பொதுக் கடன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் பங்குப் பத்திரஙகளின் பின் பக்கத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய முறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

**"சான்றிதழ்க்குரிய அசல் தொகை பெறப்பட்டது".**

4. பாரத ஸ்டேட் வஙகியின் கிளை ஒன்றில் அல்லது அதன் கூட்டு வஙகிகளின் ஏதேனும் ஒரு வஙகியில், கருவூலப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடஙகளில், இக்கடன் பத்திரஙகள், பங்கு முதல் சான்றிதழ்கள் வடிவில் இருக்குமாயின், சம்பந்தப்பட்ட வஙகியின் கிளையில்தான் ஒப்படைக்க வேண்டுமே தவிர கருவூலத்திலோ அல்லது சார் கருவூலத்திலோ ஒப்படைக்கக்கூடாது என்பதை குறிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும்.

5. கடன் தொகை திருப்பிச் செலுத்தக் கோரி, கடன் பத்திரஙகள் முகப்பிடப்பட்டுள்ள இடஙகள் நீஙகலாக பிற இடஙகளில் தொகையைப் பெற விரும்புவோர், கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரஙகளின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, சம்மந்தப்பட்ட பொதுக்கடன் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மற்றும் காப்புறுதி அஞ்சல் மூலம் அனுப்பவேண்டும். தமிழ்நாடு மாநிலத்தில், அரசு கருவூலகப் பணிகளை மேற்கொள்ளுகின்ற யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வஙகியின் கிளை அல்லது அதன் துணை வஙகிகளில் செலுத்தத் தக்க கேட்புக் காசோலை ஒன்றை வழஙகுவதன் மூலம், பொதுக் கடன் அலுவலகம், தொகை வழஙகும்.

**கு. ஞானதேசிகன்,**
தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை,
சென்னை–9.

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.